ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2071/10 - 2018 මැයි මස 15 වැනි අඟහරුවාදා - 2018.05.15

*2071/10 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்*

*1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின்படி 2018 ஆம் ஆண்டிற்குரிய தேருநர் இடாப்புக்களின் மீளாய்வு நடவடிக்கைகள் 2018, மே மாதம் 15 ஆந் திகதி ஆரம்பமாகவுள்ளதென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.*

2. தற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்களின் பிரதிகள் பதியும் அலுவலர்களால் அவர்களின் அலுவலகங்களிலும் கீழ்க்காணும் அலுவலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்படும்.

| *இடாப்புக்களின் அல்லது அவற்றின் பாகங்களின் பிரதிகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள்* | *பார்வைக்கு வைக்கப்படும் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்கள்* |
|---|---|
| கொழும்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம், (கொழும்பு மாவட்டத்தின், மாநகர சபை அதிகாரப் பிரதேசங்கள்) இல. 395, பழைய கோட்டே வீதி, இராஜகிரிய. | கொழும்பு மாவட்டத்தின் மாநகர சபை அதிகார பிரதேசங்களில் வதிவைக் கொண்டுள்ள அனைத்து தேருநர்களதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்புப் பாகங்கள். |
| கொழும்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம், இல. 395, பழைய கோட்டே வீதி, இராஜகிரிய. | கொழும்பு மாவட்டத்தின் மாநகர சபை அதிகாரப் பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வதிவைக் கொண்டுள்ள அனைத்து தேருநர்களதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்புப் பாகங்கள் |
| ஒவ்வொரு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம். | தேர்தல் மாவட்டத்திற்கான முழுத் தேருநர் இடாப்பின் பிரதி |
| ஒவ்வொரு பிரதேச செயலகம். | குறித்த பிரதேச செயலகப் பிரிவினுள் சாதாரண வதிவு உறுதியாகும் தேருநர்களின் பெயர்களை உள்ளடக்கிய தேருநர் இடாப்புக்களின் பாகங்கள். |
| ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபை நிறுவனங்கள். | ஒவ்வோர் உள்ளூராட்சிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களினுள் சாதாரண வதிவு உறுதியாகும் தேருநர்களின் பெயர்களை உள்ளடக்கிய இடாப்பின் பாகங்கள். |
| ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம். | குறித்த கிராம அலுவலர் பிரிவினுள் சாதாரண வதிவு உறுதியாகும் தேருநர்களின் பெயர்களை உள்ளடக்கிய இடாப்பின் பாகங்கள். |

1A - G 27622 — 47 (2018/05)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தனது பெயர் செல்லுபடியான தேருநர் இடாப்புக்களில் பதியப்பட்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்து பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. 2018 ஆம் ஆண்டிற்காக தேருநர்களாகப் பதியப்படுவதற்கான தகைமையைப் பெற்றிருக்கும் ஆட்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தேருநர்களைக் கணக்கெடுக்கும் அலுவலர்களினால் பிரதான குடியிருப்பாளர்களுக்கு உரிய தேருநர்களைக் கணக்கெடுக்கும் படிவங்கள் 2018.05.15 ஆந் திகதி தொடக்கம் விநியோகஞ் செய்யப்படும். பிரதான குடியிருப்பாளர்களினால் பூர்த்தி செய்யப்படும் படிவங்கள் 2018, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து மீள பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் இடம்பெறும் அப்படிவங்களின் மூலம் தனது இல்லத்தில் தேருநர்களாகப் பதிவு செய்யப்படுவதற்கான தகைமையைப் பெற்றிருக்கும் சகலரினதும் சரியான தகவல்களை பிழையின்றி விரைவாக வழங்குவதன் மூலம், கணக்கெடுக்கும் அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து பிரதான குடியிருப்பாளர்களிடமும் தேர்தல் ஆணைக்குழு கேட்டுக்கொள்கின்றது.

| | | |
|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய, | என். ஜே. அபேசேகர, | எஸ். இரத்னஜீவன் எச். ஹூல், |
| தவிசாளர், | அங்கத்தவர், | அங்கத்தவர், |
| தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. |

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2018, மே 15.

6- 28